# நம்மாழ்வார் அருளிச் செய்த
# திருவாய்மொழி
# எட்டாம் பத்து

## ஆறாம் திருவாய்மொழி - எல்லியும்
## ஆழ்வாரது பெருவிடாய் தீரக் கலக்கக் கருதித் திருமால் திருக்கடித்தானத்தில் சேவை சாதிக்க, ஆழ்வார் தாம் தரித்தமை கூறுதல்

** எல்லியும் காலையும் * தன்னை நினைந்து எழ *
நல்ல அருள்கள் * நமக்கே தந்து அருள் செய்வான் **
அல்லி அந்தண்ணந்துழாய் முடி * அப்பன் ஊர் *
செல்வர்கள் வாழும் * திருக்கடித்தானமே 1

திருக்கடித்தானமும் * என்னுடைச் சிந்தையும் *
ஒருக்கடுத்து * உள்ளே உறையும் பிரான் கண்டீர் **
செருக் கடுத்து அன்று * திகைத்த அரக்கரை *
உருக் கெட * வாளி பொழிந்த ஒருவனே 2

ஒருவர் இருவர் ஓர் * மூவர் என நின்று *
உருவு கரந்து * உள்ளுந்தோறும் தித்திப்பான் **
திரு அமர் மார்வன் * திருக்கடித்தானத்தை *
மருவி உறைகின்ற * மாயப் பிரானே 3

மாயப் பிரான் * என வல் வினை மாய்ந்து அற *
நேசத்தினால் * நெஞ்ச நாடு குடி கொண்டான் **
தேசத்து அமரர் * திருக்கடித்தானத்தை *
வாசப் பொழில் * மன்னு கோயில் கொண்டானே 4

கோயில் கொண்டான் * தன் திருக்கடித்தானத்தை *
கோயில் கொண்டான் * அதனோடும் என் நெஞ்சகம் **
கோயில் கொள் * தெய்வம் எல்லாம் தொழ * வைகுந்தம்
கோயில் கொண்ட * குடக் கூத்த அம்மானே 5

கூத்த அம்மான் * கொடியேன் இடர் முற்றவும் *
மாய்த்த அம்மான் * மதுசூத அம்மான் உறை **
பூத்த பொழில் * தண் திருக்கடித்தானத்தை *
ஏத்த நில்லா * குறிக்கொண்மின் இடரே 6

கொண்மின் இடர் கெட * உள்ளத்துக் கோவிந்தன் *
மண் விண் முழுதும் அளந்த * ஒண் தாமரை **
மண்ணவர் தாம் தொழ * வானவர் தாம் வந்து *
நண்ணு திருக்கடித்தான நகரே 7

தான நகர்கள் * தலைச் சிறந்து எங்கெங்கும் *
வான் இந்நிலம் கடல் * முற்றும் எம் மாயற்கே **
ஆன இடத்துமென் நெஞ்சும் * திருக்கடித்
தான நகரும் * தன தாயப் பதியே 8

தாயப் பதிகள் * தலைச் சிறந்து எங்கெங்கும் *
மாயத்தினால் மன்னி * வீற்றிருந்தான் உறை **
தேசத்து அமரர் * திருக்கடித்தானத்துள் *
ஆயர்க்கு அதிபதி * அற்புதன் தானே 9

அற்புதன் நாராயணன் * அரி வாமனன் *
நிற்பது மேவி * இருப்பது என் நெஞ்சகம் **
நற்புகழ் வேதியர் * நான்மறை நின்று அதிர் *
கற்பகச் சோலைத் * திருக்கடித்தானமே 10

** சோலை திருக்கடித்தானத்து உறை * திரு
மாலை * மதிள் குருகூர்ச் * சடகோபன் சொல் **
பாலோடு அமுது அன்ன * ஆயிரத்து இப்பத்தும் *
மேலை வைகுந்தத்து * இருத்தும் வியந்தே 11

**ஆழ்வார் திருவடிகளே சரணம்**